(இ) திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. புதிதாக அமைக்கப்பட்ட திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு (Syndicate) அலுவல் சார்பற்ற உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு ஒரு சட்டமன்றப் பேரவை உறுப்பினரைத் தேர்ந்தெடுக்குமாறு அப்பல்கலைக்கழகத்தின் பதிவாளரிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக் காலம், தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய ஆட்சிக் குழுவின் உறுப்பினர் பதவி முடிவடையும்.

தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை *11–11–2008*, அதாவது இன்று மாலை *4–00* மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்பு மனுப் படிவங்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்பு மனுக்கள் *12–11–2008* அன்று மாலை *3–00* மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்புகின்ற வேட்பாளர்கள் *12–11–2008* மாலை *4–00* மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடத்திற்கு மேற்படுமாயின், அப்பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு (Syndicate) உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–00

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டே அவையிலிருந்து வெளியேறினர்.)